செ.வெ.எண்.52 நாள்:18.03.2017

# பத்திரிக்கை செய்தி

தேசிய வைட்டமின் ‘ஏ’ குறைபாட்டு நோய்கள் கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் நமது குழந்தைகளின் பார்வை இழப்பை தடுக்கும் நோக்கத்துடன் வைட்டமின் ‘ஏ’ திரவம் 20.03.2017 முதல் 25.03.2017 வரை ( புதன் நீங்கலாக) நமது மாவட்டத்தில் நடைபெற உள்ளது.

6 மாதம் முதல் 60 மாதம் வரை உள்ள குழந்தைகளுக்கு 6 மாதத்திற்கு ஒரு முறை 1 வயதுக்கு கீழ் 1 மில்லியும் 1 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு 2 மில்லியும் வழங்கப்படுகிறது. நமது சுகாதார மாவட்டத்தில் உத்தேசமாக 74240 குழந்தைகளுக்கு வைட்டமின் ‘ஏ’ திரவம் வழங்கப்பட உள்ளது.

துணை சுகாதார மையங்கள், அங்கன்வாடி மையங்களின் மூலம் கிராம சுகாதார செவிலியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் உதவியுடன் இத்திட்டத்தை செயல்படுத்த உள்ளனர். 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வைட்டமின் ‘ஏ’ திரவம் வழங்கி வைட்டமின் ‘ஏ’ குறைபாட்டு நோய்களிலிருந்தும் பார்வையிழப்பிலிருந்தும் நமது குழந்தைகளை காப்போம்.

மேற்கண்ட தகவலை புதுக்கோட்டை சுகாதார பணிகள் துணை இயக்குநர்

மரு. பரணிதரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்திவெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**